திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவுச் சங்கத்திற்கு அரசுத் துறைகளின் சார்பிலே 2 லட்சம் ரூபாய் வர வேண்டி உள்ளது. மேலும் 1978ஆம் ஆண்டில் அங்கே ஏற்பட்ட புயல் காரணமக பல லட்சம் ரூபாய் சேதம் ஏற்பட்டுள்ளது. ஆகவே இந்தத் தொழிலாளர்களுக்காக செட்டில்மென்ட் செய்யும் போது அரசாங்கம் அனுதாபத்தோடு கவனித்து உதவி தொகை அளிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, அனுதாபத்தோடு கவனிக்கப்படும்.

(ஆ) புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் மின் உற்பத்தி இயந்திரம் இயங்காதது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ராஜ்குமார் விஜய ரகுநாத தொண்டமான், பெ. திருமாறன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. பெ. திருமாறன்: தலைவர் அவர்களே, ''புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் மின் உற்பத்தி இயந்திரம் (ஜெனரேட்டர்) இயங்காததன் காரணமாக அறுவை சிகிச்சை செய்து கொள்ள முடியாமல், நோயாளிகள் படும் இன்னல் குறித்த' அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மாவட்ட தலைமை மருத்துவமனை புதுக்கோட்டையில் ரூ. 3.30 இலட்சம் செலவில் 63 கே.வி.ஏ. சக்தி வாய்ந்த ஒரு ஜெனரேட்டர் அமைக்க ஏற்கனவே அரசு ஆணை வெளியிட்டு உள்ளது. இம் மருத்துவமனையில் ஜெனரேட்டர் பொருத்து வதற்குத் தேவையான ஒரு அறை கட்டவும், மற்றும் சில மாற்று மராமத்துப்பணிகளுக்காகவும் பொதுப்பணித் துறையினரால் உரிய ஒப்பந்தப்புள்ளி (டெண்டர்) விவரங்கள் கோரப்பட்டு உள்ளன. மேலும் ஜெனரேட்டர் கேட்கப்பட்டுள்ள உரிய கம்பெனியிடமிருந்து வரப்பெற்றவுடன், அம்மருத்துவமனை யில் பொருத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன. எனவே, புதுக்கோட்டை மாவட்ட மருத்துவமனையில் ஜெனரேட்டர் அமைப்பதன் மூலம் மின்சாரத் தடையால் அறுவை சிகிச்சை அரங்குகளில் ஏற்படும் கஷ்டத்தை நீக்கலாம்.

1982 மார்ச் 25]

திரு. பெ. திருமாறன் : தலைவர் அவர்களே, அரசு இந்த ஜெனரேட்டர் வைக்க வேண்டுமென்று ஆணையிட்டும் கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. சாதாரண காரியமாக கருதாமல் இதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து அரசு விரைவாக ஜெனரேட்டர் வாங்குவதற்கும், அதற்கான கட்டிடம் கட்டி முடிக்கவும் துரித நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள உத்தரவிடுவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனையை பொறுத்தவரையில் நானே நேரிடையாகச் சென்று பார்வையிட்டேன். உடனடியாக இந்த ஜெனரேட்டரை பொருத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று செயலாளர் அவர்களிடம் சொல்லி இருக்கிறேன். விரைவிலே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு, அந்த ஜெனரேட்டர் இயங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அறிக்கை அளித்தல்
சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையை திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் பேரவைக்கு அளிப்பார்.

திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை சட்ட விதிகள் ஆய்வுககுழு இரண்டாவது அறிக்கையை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) ஆளுநரிடமிருந்து வரப்பெற்ற செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1981–82 ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பேரவையில் மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India, I, Sadiq Ali, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further Grants for the year 1981-82"